# மாணவரை இனங் காணல்
# Students Identification


**Mr.S.Jeyachandran (SLTES)**

Spe.Trd.Tamil , B.A Hors (2nd upper), PGDE, M.Ed

**Professionals Development Center for Teachers**

**Manager- PDCT - Puliyankulam**

**Vavuniya North Zone**






மாணவர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் உட்படுத்தப்படும் போது முதன்முதலில் அவர்களை சரியாக இனங்கண்டு கொள்வது அவசியமாகும். ஆதிகாலம் முதல் மாணவர்களை இனங்காண்பது முக்கியத்துவத்தையும், இனங்காணும் முறையையும் வெவ்வேறுபட்ட உளவியலாளர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்..











பாடசாலை அல்லது வகுப்பறையில் நீங்கள் சந்திக்கும் மாணவர்கள் எல்லோரும் சாதாரண நிலையில் உள்ளவர்கள் அல்லர். ஒருவருக்கு ஒருவர் வித்தியாசமான பிள்ளைகளுடன் செயற்பட வேண்டிய நிலையுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

# விசேட தேவையுடைய பிள்ளைகள்

- மீத்திறன் - திறமையான பிள்ளைகள்
- உடற் குறைபாடுடைய பிள்ளைகள்
- உளக் குறைபாடுடைய பிள்ளைகள்.

# விசேட தேவையுடைய பிள்ளைகள்

- நீர் வகுப்பறையில் விசேட தேவையுடையோரை இனங்கண்டுள்ளீரா?
- அவ் விசேட தேவை எவ்விதத்திலானது?
- அதற்கு மேற்கொண்ட பரிகார கற்பித்தல் எவை?
- உமது பிரதிபலிப்புக்கள் எவை?
- அவற்றில் மிகச் சிறந்தது என நீர் எண்ணும் அனுபவம் எது?

# விசேட தேவையுடையோரை இனங்காணல்

- திறமையான மாணவர்கள்
- மெல்லக் கற்கும் மாணவர்கள்
- அவதானம் குறைந்த மாணவர்கள்
- சமூகத்தை ஆக்கிரமிக்கும் மாணவர்கள்

✓ மேற்படி மாணவர்களில் ஒன்றைத் தெரிவு செய்க

✓ கீழ் குறிப்பிடும் தலைப்பின் கீழ் கலந்துரையாடி அனுபவங்களின் உதவியுடன் அறிக்கை ஒன்றை தயாரிக்குக

1. அம் மாணவர்களின் நடத்தை இயல்புகள்
2. அவ்வியல்புகளை இனங்காண பயன்படும் உபகரணங்கள்
3. இம் மாணவருக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடிய செயன்முறைகள் (உமது அனுபவங்களை உதாரணம் காட்டுக)

# விசேட தேவையுடைய பிள்ளைகள்

1. உடலியல், மனோவியல் ரீதியாக மாற்றங்களைக் காட்டி கற்றலில் குறைபாடு காட்டுவோர்
2. மாறுபட்ட விசேட இயல்புடையோராவர் (மானசீக குறைபாடு)
   – கேள்விக் குறைவு (முழு / அரை) செவிடு
   – பார்வைக் குறைவு (முழு / அரை) குருடு
   – அங்க வேறுபாடு
   – உடலியல் குறைபாடு
3. கற்றலுக்குப் பின்வாங்கி மெதுவாக கற்போர்
4. கற்க முடியாதவர்கள்

❖ எல்லா பிள்ளைகளிலும் விசேட தேவை இருக்கும்.

❖ விசேட இயல்புகள் பிறப்பில் காணப்படக்கூடும் / சமூக வெளிக் காரணங்களாலும் ஏற்படக்கூடும்.

# திறமையான பிள்ளைகள்

- வயது, தோற்றம், உடல் விருத்தி சம மட்டத்திலிருக்கும்.
- இயலுமைகள், ஆற்றல்கள், திறன்கள் அதிகமாக இருக்கும்.
- கொடையளிக்கப்பட்ட மாணவர்கள் எனப்படுவர்
- பிறப்பிலேயே இவ்வியல்புகளைக் கொண்டிருப்பர்.
- பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் உயர்வை வெளிப்படுத்துவர்.
- இவர்களுக்கு விசேட கற்றல் சந்தர்ப்பம் அவசியம்.
- விசேட கவனம் செலுத்துவது ஆசிரியர் பொறுப்பாகும்.

# திறமையானவர்களை இனங்காணும் முறைகள்

1. கணிப்பீடு
2. சிந்தனைப் பேற்றை அளத்தல்
3. மனோபலத்தை அவதானத்திற்குட்படுத்தல்
4. ஆக்கத்திறன், புத்திக் கூர்மையை அளத்தல்
5. கிரகித்தல் விரைவை அவதானித்தல்

# மெல்லக் கற்போர்

- இயல்புகள்
  - கணித எண்ணக்கரு அடைவு குறைபாடு / தாமதம்
  - கிரகித்தல் சக்தி குறைவு / தாமதம்
  - மந்த கதியில் அனுபவம் பெறல்
  - சமூகத் தொடர்பாடு குறைவு
  - பங்குபற்றல் / ஆக்கத்திறன் செயற்பாட்டில் இணையாமை
- இவர்களுக்கு ஆசிரியர்கள் தமது அனுபவத்துக்கேற்ப பரிகாரக் கற்பித்தலைத் திட்டமிட வேண்டும்.

## வகுப்பறையில் மெல்லக் கற்போருக்கு உதவும் வழிமுறைகள் சில

1. தாம் மெல்லக் கற்போர் எனும் உணர்வு அவர்களிடத்து ஏற்படுதலைத் தவிர்க்குக
2. அவர்களின் தேவைகளில் கவனஞ் செலுத்துக
3. அவர்களின்பால் சகிப்பின்மையைக் காட்டாதீர்
4. மெல்லக் கற்போர் திறமையாகச் செயற்படும் துறைகளைக் கண்டுபிடிக்க முயற்சிக்கவும்
5. பொறுப்புக்களை வழங்கி அவர்கள்மீது நம்பிக்கை வையுங்கள்
6. சாதாரண பிள்ளைகளைப் போன்று அவர்களுடன் இடைவினையுறுக.

1. தாம் மெல்லக் கற்போர் எனும் உணர்வு அவர்களிடத்து ஏற்படுதலைத் தவிர்க்குக

ஏனெனில், தாம் மெல்லக் கற்போர் என்றோஅல்லது சக மாணவரைவிடத் தாழ்வான நுண்மதி உடையவர் என்றோ பட்டஞ்சூட்டிவிடுவர் எனும் நிரந்தரப் பயத்துடன் இருப்பர்

பதிலாக ஏனைய பிள்ளைகளைப் போன்று அவர்களைக் கையாள்வதன்மூலம் வகுப்பில் சௌகரியமாகச் இயங்கவிடுக

## 2. அவர்களின் தேவைகளில் கவனஞ் செலுத்துக

ஆயினும், குறித்த பிள்ளையில் கவனஞ் செலுத்துதல் ஏனைய பிள்ளைகளுக்கு வெளிப்படையாகத் தெரிய வேண்டாம். ஏனெனில் தம்மீது ஏனையோர் பரிதாபப்படுதலை அவர்கள் விரும்பமாட்டார்கள்

ஏந்தப் பிள்ளையும் தமது ஆற்றலுக்குப் பாராட்டுதலை விரும்புவரே தவிர தம்மீது பரிதாபப் படுதலை விரும்பமாட்டார்

## 3. அவர்களின்பால் சகிப்பின்மையைக் காட்டாதீர்

இதன் காரணமாகத் தாம் வேண்டப்படாதவர் என எண்ணிவிடுவர்

வகுப்பில் சகிப்பு மனப்பாங்கினோடு அவர்களது செயற்பாடுகளைக் கண்காணிக்குக

சகபாடிகளின் முன்பாகத் தமது அபிப்பிராயங்களைக் கூறச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துக

மேலதிக செயல்களில் ஈடுபடவைப்பதன்மூலம் அவர்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவுங்கள்

## 4. மெல்லக் கற்போர் திறமையாகச் செயற்படும் துறைகளைக் கண்டுபிடிக்க முயற்சிக்கவும்

உதாரணமாக, சில பிள்ளைகள் சித்திரம் அல்லது காற்பந்து அல்லது சங்கீதத்தில் மிகத் திறமை உள்ளவர்களாகக் காணப்படலாம். இவற்றினை அப் பிள்ளைகளின் வலுக்களாகக் கருதி இத்துறைகளில் மேலதிக வகுப்பக்களில் ஈடுபட ஊக்குவிக்குக

வகுப்பறையில் அவர்கள் செய்யும் ஒவ்வொரு சிறு செயலையும் குறித்துக் கொள்க. அவர்களைப்பற்றி அறிவதற்கு இவை பெரிதும் உதவும்

5. பொறுப்புக்களை வழங்கி அவர்கள்மீது நம்பிக்கை வையுங்கள்

உயர் நுண்மதி கொண்டோருடன் இவர்களை ஒப்பிடாதீர்கள். இது அவர்களின் உற்சாகத்தை மழுங்கடித்துவிடும்

வகுப்பில் அளவுக்கு அதிகமாக இவர்களைப் பாராட்டியும் விடாதீர்கள். இது ஏனையவர்களின் கவனம் இவர்கள்பால் திரும்புவதற்கு ஏதுவாகிவிடும்.

6. சாதாரண பிள்ளைகளைப் போன்று அவர்களுடன் இடைவினையுறுக.

- சாதாரண பிள்ளைகளுடனான இடைவினையுறவு போன்றே இவ்வகைப் பிள்ளைகளுடனும் உங்கள் இடைவினையுறவு அமையவேண்டும்.

- அவர்களுடைய விருப்புக்கள் வெறுப்புக்கள் உட்பட அவர்களின் இயல்புகள் பற்றி நன்கு அறிந்துகொள்ளுங்கள்.

# மீத்திறன் மாணவர்கள்

பின்வரும் இயல்புகள் நிறைந்தவர்கள் மீத்திறன் மாணவர்கள்:

- ஏனையோரைவிட முன்னதாகவும் விரைவாகவும் கற்கவேண்டிய விடயங்களைக் கற்கும் ஆற்றல்

- மிகச் சிக்கலானதும் கருத்துநிலையிலும் உள்ள விடயங்களைக் கையாளும் திறன்

- சிக்கல் மிகுந்த பிரச்சினைகளுக்குத் திறமையாகத் தீர்வுகாணும் ஆற்றல்

***இந்த ஆற்றலுடைமை வெளிப்படுத்தலைத் தூண்டக்கூடிய அனுபவங்கள் வீட்டிலும் பாடசாலையிலும் அவசியமாகின்றன.***

# மீத்திறன் மாணவர்களுக்கான கற்பித்தல்.

உயர் உள ஆற்றல் கொண்ட மாணவருக்குக் கற்பித்தலென்பது பிள்ளையின் வயது, கற்கும் பாடம், பிள்ளையின் கற்றற் பாங்கு, பிள்ளையின் பால்நிலை, கலாசாரம் என்பவற்றுடன் வேறுபடக்கூடியது.

செழிப்பான அனுபவத்துடன் பாடசாலைக்கு வருகின்ற பிள்ளைக்கான போதனையானது அதே உள ஆற்றலுடன் ஆனால் செழிப்புக்குன்றிய அனுபவத்துடன் வருகின்ற பிள்ளைக்கான போதனையினின்றும் வேறுபடுகின்றது.

ஆயினும், உயர் உள ஆற்றல் கொண்டவர்களுக்கான பாடத்திட்டம், போதனை என்பவற்றில் பொதுவான சுட்டிகள் உள்ளன.

# மீத்திறன் மாணவர்களுக்கான கற்பித்தல்.

1. உயர் உள ஆற்றல் கொண்ட மாணவருக்குக் கற்பித்தலானது பின்வருவனவற்றுடன் வேறுபடக்கூடியது:

- பிள்ளையின் வயதுகற்கும் பாடம்
- பிள்ளையின் கற்றற் பாங்கு
- பிள்ளையின் பால்நிலை
- கலாசாரம்

2. செழிப்பான அனுபவத்துடன் பாடசாலைக்கு வருகின்ற பிள்ளைக்கான போதனையானது அதே உள ஆற்றலுடன் ஆனால் செழிப்புக்குன்றிய அனுபவத்துடன் வருகின்ற பிள்ளைக்கான போதனையினின்றும் வேறுபடுகின்றது.


ஆயினும், உயர் உள ஆற்றல் கொண்டவர்களுக்கான பாடத்திட்டம், போதனை என்பவற்றில் ***பொதுவான சுட்டிகள்*** உள்ளன.

# மீத்திறன் கற்போருக்கான நன்முறைப் போதனையின் இயல்புகள்

1. மீத்திறன் மாணவர்களுக்கான நல்ல போதனையானது சிறப்பான பாடத்திட்டம், போதனை என்பவற்றில் ஆரம்பிக்கின்றது.
2. மாணவரின் தனியாள் தேவைகளுக்கேற்ப மீத்திறன் கற்போருக்கான போதனை வேகம் அமைகிறது.
3. மீத்திறன் கற்போருக்கன சிறந்த கற்பித்தல் ஒத்தவயதினர் பெரும்பாலோரைவிட உயர் கடின மட்டத்தில் இடம்பெறும்.
4. கடின அறைகூவலை எதிர்கொண்டு வெற்றிகொள்வதற்கு ஒத்தாசையாக ஆசிரியர் இருப்பார்.

# உளப் பகுப்பியற் கொள்கை
# Psycho Analytic theory
## பிரபலமான சில உளப்பகுப்பியலாளர்கள்

- **Sigmund Freud**
- **Alfred Adler**
- **Carl Jung**
- **Erik Erikson**
- Anna Freud
- Erich Fromm
- Harry Stack Sullivan
- Susan Sutherland Isaacs


My Boy! Smoking Is One Of The Greatest And Cheapest Enjoyments In Life, And If You Decide In Advance Not To Smoke, I Can Only Feel Sorry For You.
~ SIGMUND FREUD ~
Statustown.com

# சிக்மண்ட் பிராய்ட் என்பாரின் உள-பால் விருத்திக் கொள்கை

பிராய்ட்டின் கருத்துப்படி ஐந்து வயதளவிலேயே ஒரு பிள்ளையின் ஆளுமை பெரும்பாலும் வடிவம் பெற்றுவிடுகிறது.

பிள்ளையின் ஆளுமை விருத்தியில் இளமைக்கால அனுபவங்களின் வகிபாகம் மிகப் பெரிது. அது மட்டுமன்றி பிள்ளையின் பிற்கால வாழ்விலும் அதன் செல்வாக்கு பெரிதாகும்.

**லிபிடோ** (libido) என அழைக்கப்படும் உள-பால் சக்தியானது மனித நடத்தையின் பின்னாலுள்ள உந்துவிசையாகும் என அவர் கூறுகிறார்.

மனிதனின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் ஊக்கியாகச் செயற்படுவது லிபிடோவாகும்.

மனிதனின் ஆளுமையானது பிள்ளைப் பருவப் படிநிலைகள் ஊடாக விருத்தி பெறுவதாக பிராய்ட் குறிப்பிடுகின்றார்.

ஒவ்வொரு படிநிலையிலும் உடம்பின் குறித்த பகுதிகள் இன்பத்தை நாடும் லிபிடோ எனும் சக்தி குவிக்கப்படும் பிரதேசமாக அமைகின்றது.

பிள்ளையின் ஒவ்வொரு உள-பால் படிநிலையும் திருப்திகரமாக நிறைவு பெறுமாயின் நலமான ஆளுமைகொண்டவராகப் பிள்ளை உருவாகிறான்.

குறித்த படிநிலைக்குரிய சில எழுவினாக்களுக்குத் தீர்வு காணப்படாத நிலைமை ஏற்படுமாயின், **"நிலைநிறுத்தம்"** எனும் நிலைமை தோன்றும். அதாவது, பிள்ளையின் வயது அதிகரித்துச் செல்லினும் முன்னதான ஓர் உள-பால் படிநிலையிலேயே அவன் காணப்படுவான்.

உதாரணமாக, ஒரு பிள்ளை வாயின்ப படிநிலையில் **நிலைநிறுத்தம்** பெற்றுக் காணப்படுமாயின், அவன் பிறரில் அதிகளவில் தங்கியிருப்போனாயும், புகைத்தல், மதுபாவனை, உண்ணுதல் போன்ற செயல்கள் மூலமாக இன்பத்தை பெறமுனைவோனாகவும் காணப்படுவான்

# பிராய்ட்டின் உள-பால் விருத்திப் படிநிலைகள்

- வாய்வழி இன்பநிலை 0 – 2 வரு Oral stage
- குதவழி இன்பநிலை 2 – 4 வரு Anal stage
- பரலுறுப்பு நிலை 4 – 5 வரு Phallic stage
- மறைப் பால்நிலை 6 – பருவமடைதல் Latency stage
- இனவிருத்திப் படிநிலை பூப்பு தொடக்கம் Genital Stage

| வயது | புடிநிலையின் பெயரும் | முரண்பாடு |
| --- | --- | --- |
| 0 – 2 | வாய் :உறிஞ்சுதல், கடித்தல், விழுங்குதல் | பாலூட்டல் நிறுத்தம் |
| 2 -4 | குதம்: மலம் கழித்தல் அல்லது அடக்குதல் | கழிவகற்றல் பயிற்சி வழங்கல் |
| 4 – 5 | பாலுறுப்பு: பாலுறுப்பில் கவனஞ்செலுத்தல் | இடிபஸ் சிக்கல், எலக்ரா சிக்கல் |
| 6 – பூப்பு | மறைநிலை: பாலியல் உந்தல்கள் விளையாட்டு, பொழுதுபோக்கு என்பவற்றால் புடம்பெறல் | |
| பூப்பு தொடக்கம் | இனவிருத்ததி: பாலியல் உடல் மாற்றங்கள் அடக்கப்பட்ட இச்சைகள் மீளெழுச்சிபெறல் பிறர்பால் நேரடியான பாலியல் உணர்வுகள் | சமூக விதிகள் |

# ஊக்கல் கொள்கைகள் (பிரபலமானவை)

- மாஸ்லோ - தேவைக் கொள்கை
- பிராய்ட் - நனவிலி ஊக்கல் கொள்கை
- மக்டூகல் - இயல்பூக்கக் கொள்கை
- ஒல்போட் - ஊக்கிகளின் தன்னாதிக்கத் தொழிற்பாடு

மானிடவியல்சார் முகாமையின் தந்தைகளுள் ஒருவரான ஏபிரகாம் மாஸ்லோ என்பவர் 1943 இல் **ஐந்து அடிப்படை மனித தேவைகள்** பற்றிய கருத்தை முன்வைத்தார். இவை, ஆற்றல் அடிப்படையில் ஏறு வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

# மாஸ்லோவின் ஐந்து அடிப்படைத் தேவைகள்

1. **உடலியல் தேவை** (உயிரியல் தேவை) Physiological needs
2. **பாதுகாப்புத் தேவை** Safety needs
3. **அன்புத் தேவை** Belongingness/love & affection
4. **கணிப்புத் தேவை** Esteem needs
5. **சுய நிறைவுத் தேவை** (சுய அடைவுத் தேவை) Self actualization

பின்னாளில் மேலும் **மூன்று** தேவைகளை இணைத்துக் கொண்டார்


1. **அறிகைத் தேவை** cognitive need - **புதிதாக இணைக்கப்பட்டது**
2. **அழகியல் தேவை** aesthetic need - **புதிதாக இணைக்கப்பட்டது**
3. **அறிவுக்கும் அப்பாற்பட்ட தேவை** transcendence need

(5வது தேவை இரண்டாகப் பிரிக்கப்பட்டது)


| | |
|---|---|
| 1 | **உடலியல் தேவை:** உயிர்வாழ் தேவை - பசி, தாகம், சுவாசம், கழிவகற்றல், பாலியல் தேவை,... |
| 2 | **பாதுகாப்புத் தேவை: ஆளின் பாதுகாப்பு, நிதிவள பாதுகாப்பு, உடல்நல பாதுகாப்பு, ..** |
| 3 | **அன்புத் தேவை: சமூகத் தேவைகள், அன்பு, ஆதரவு, நட்பு, குடும்பம்** |
| 4 | **கணிப்புத் தேவை : பிறரின் கணிப்பு, தன்னியல் கௌரவம்** |
| புதிது | **அறிகைத் தேவை: புலமையாளரின் அறிகைத் தேவை, அறிதல், விளக்கம்பெறல்** |
| புதிது | **அழகியல் தேவை: ஒழுங்கு, சமச்சீர் ் கலைஞனின் மனவெழுச்சித் தேவை** |
| 5 | **சுய நிறைவுத் தேவை: ஒருவரால் அடையப்படக்கூடியதை அடைதல்** |
| 5இன் பிரிவு | **அறிவுக்கும் அப்பாற்பட்ட தேவை: மற்றவர்களின் தேவைகளை அவர்கள் அடையச் செய்தல். சுய தேவைகளுக்குமப்பால் செயற்படும் அவா** |


Self-
actualization
Esteem
Love/belonging
Safety
Physiological

# **Maslow's** Hierarchy of needs 2D




Your Logo


Transcendence
Self Actualisation
Aesthetic Needs
Cognitive Needs
Esteem Needs
Belonging and Love Needs
Safety Needs
Physiological Needs
Growth (B) Needs
Deficiency (D) Needs
Maslow's Hierarchy of Needs - Extended
communicationtheory.org


Transcendence
Self-actualization needs: to find self-fulfillment and realize one's potential
Aesthetic needs: symmetry, order, and beauty
Cognitive needs: to know, understand, and explore
Esteem needs: to achieve, be competent, and gain approval and recognition
Belongingness and love needs: to affiliate with others, be accepted, and belong
Safety needs: to feel secure and safe, out of danger
Physiological needs: hunger, thirst, and so forth


# ஜீன் பியாஷே Jean Piaget


# (1896 - 1980)

# Jean Piaget-Cognitive Development.

- Piaget provided support for the idea that children think differently than adults and his research identified several important milestones in the mental development of children






Piaget's Stages of Cognitive Development
HALF
EMPTY
FULL
Sensorimotor Stage
Birth to 2 yrs
Preoperational Stage
2 to 7 yrs
Concrete Operational Stage
7 to 11 yrs
Formal Operational Stage
12 and up
verywell

## ஜீன் பியாஷே  Jean Piaget (1896 - 1980)

**அறிகை உளவியலாளர் - விருத்தி உளவியலாளர்**

**குழந்தை உளவியலாளர் (சுவிட்சலாந்து)**

**16 பல்கலைக்கழகங்கள் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியுள்ளன**

சிறு பிள்ளைகளின் செயல்களை உற்றுநோக்கி அவற்றுக்கூடாகத் தனது கருத்துக்களை முன்வைத்தவர். தொடக்க காலத்தில் தனது பிள்ளைகளை அவதானித்தார்.

ஒரு பிள்ளையின் அறிகை விருத்தி எனும்போது பிள்ளை தனது மனத்தில் உலகைப் பற்றிய ஓர் உளமாதிரிகையை உருவாக்குதல் அல்லது விருத்தி செய்தல் எனப் பொருள்படும்.

# உளச் செயற்பாடு

குழந்தை பிறந்த சில நாட்கள் வரை தெறிவினைச் செயற்பாடுகளுக்கூடாகவே தனது சூழலுடன் இடைவினையுறுகின்றது.

நாளடைவில் பிள்ளையின் செயல்கள் நோக்குடையனவாக அமைகின்றன. அதாவது சிந்தனைக்கூறு உடையனவாகக் காணப்படும்.

சூழலுக்கு இயைபுறும் வகையிலான இந்த நடத்தைக் கோலம் பிள்ளையின் உள்ளத்தில் ஒழுங்கமைக்கப்படுகிறது. இதனைப் பியாஷே **அனுபவத் திரளமைப்பு (schema)** எனக் குறிப்பிடுகின்றார்.

சூழலுக்கு இயைபுறும் செயற்பாட்டில் **தன்மயமாக்கல், தன்னமைவாக்கம்** எனும் இரு உளத் தொழிற்பாடுகள் இடம்பெறுகின்றன.

பிள்ளையின் புதிய அனுபவங்கள் ஒரு புதிய திரளமைப்பாக உருமாறலாம் அல்லது ஏற்கனவேயுள்ள திரளமைப்பினுள் அடக்கப்படலாம்.

**தன்மயமாக்கல்:** புதிய அனுபவத்தினை ஏற்கனவேயுள்ள திரளமைப்பினுள் ஒன்றிணைக்கும் உளச் செயற்பாடு.

**தன்னமைவாக்கல்:** புதிய அனுபவத்தினையும் இணைத்துக் கொள்ளும் வகையில் ஏற்கனவேயுள்ள திரளமைப்பினை மாற்றியமைக்கும் உளச் செயற்பாடு.

செயல்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் உள விம்பங்களே பிள்ளையின் திரளமைப்பாகின்றன.

இத் திரளமைப்பின் உருவாக்கம் அவர்களிடத்துத் தர்க்கச் சிந்தனைக்கு வழிகோலுகிறது.

சிந்தனை விருத்தியின் உச்ச நிலையில், புறச் செயல்களின்றியே, பிள்ளையினால் கற்பனா சிந்தனையில் ஈடுபட முடிகின்றது. பியாஷே இதனை **உளத் தொழிற்பாடு** எனக் குறிப்பிடுகிறார்.

பிள்ளையின் வாழ்வில் பல செயல்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறுகிறது. குறித்த ஒரு செயல் பிள்ளையின் உள்ளத்தில் பதிவாகின்றபோது, குறித்த அச்செயலுக்கு முன்னதாக இருந்த நிலைமையைத் தனது சிந்தனையிற் கொண்டுவருதல் **சிந்தனையின் பின்திரும்பும் இயல்பு** எனப்படும்.

| படி இல | விருத்திப் படிநிலை | வயது | பிரதான இயல்புகள் |
|---|---|---|---|
| 1 | புலனியக்கப் பருவம் | 0 - 2 வரு | **பொருள் நிரந்தரம்:** தமக்கு முன்னாலிருப்பதை அறிவர். தாம் பார்ப்பதையும் செய்வதையும் உடனடி சூழலுடனான இடைவினையையும் கவனத்திற் கொள்வர் |
| 2 | முன்-உளத் தொழிற்பாட்டுப் பருவம்<br><br>அ. முன் எண்ணக்கருப் பருவம் | 2 - 4 வரு | **தன் மைய நிலை:** மையப்படுத்தல், மாறின்மை, சிந்தனையின் பின்திரும்பும் இயல்பு இல்லாமை, வகைப்படுத்தல், இடைக்கால அனுமானம். பொருட்கள் பற்றிக் குறியீட்டு வடிவில் சிந்திப்பர். மொழிப் பயன்பாடு முதிர்ச்சி பெறுகிறது. ஞாபகமும் கற்பனையும் விருத்திபெறுதல். உள்ளுணர்வைத் தளமாகக் கொண்ட சிந்தனை. முழுமையான தர்க்கச் சிந்தனை இல்லை. |
| | ஆ. உள்ளுணர்வுப் பருவம் | 4 - 7 வரு | தம்மைச் சூழவுள்ள பௌதிக மாதிரிகைகளைக் குறிப்பிடுவதற்குக் குறியீடுகளைப் பயன்படுத்துவர். தமது குடும்பத்தின் படத்தை வரைவர். ஆயினும், ஆட்களின் உருவம் அளவிடைக்கு அமையாமலும் செம்மையான பௌதிக அளவுகள் இல்லாமலும் இருக்கும். பிள்ளைகளுக்கு இது தெரியும். எனினும் அவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாகத் தென்படுவதில்லை.<br><br>அதீத விருப்பார்வம் உடையோராயும் ஏராளமான வினாக்களைக் கேட்போராயும் காணப்படுவர். ஏராளமான விடயங்களை அறிந்திருப்பர். ஆனால் எவ்வாறு இதனைப் பெற்றனர் என்பது தெரியாது. |

| | விருத்திப் படிநிலை | வயது | பிரதான இயல்புகள் |
|---|---|---|---|
| 3 | தூல உளத் தொழிற்பாட்டுப் பருவம் | 7-11 வரு | **காப்பு:**<br><br>காப்பு எண்ணக்கரு உருவாகிய நிலை. சிந்தனையின் பின்திரும்பல் நிலை ஏற்பட்டுள்ளமையால் தர்க்கமுறையில் சிந்திப்பர்: ஆனால் பௌதிக கையாளலுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தன்மையச் சிந்தனை கிடையாது. வகைப்படுத்தல் திறன்களில் பாரிய முன்னேற்றம். பெரும்பாலான பிள்ளைகளால் கருத்துநிலையில் சிந்திக்க முடிவதில்லை. |
| 4 | நியம உளத் தொழிற்பாட்டுப் பருவம் | 11க்கு மேல் | **சிந்தனையில் கருத்துக்களைக் கையாளுதல்:**<br><br>கருத்துநிலை எண்ணக்கருக்களுக்குத் தர்க்கரீதியாகக் குறியீடுகளைப் பயன்படுத்துவர். (விஞ்ஞானம், கணிதம்) . பல்லின மாறிகள் பற்றிப் படிமுறையாகச் சிந்திப்பர். கருத்துநிலைத் தொடர்புகள பற்றிச் சிந்திப்பர். பிரச்சினை விடுவித்தல் திறன்கள் அதிகரித்திருக்கும். |

# Total Child Development

# பூரண விருத்தி
# (Total Development)



## பிரதான உளவியல் எண்ணக்கருக்கள் சில....
## Few Important Psychological Constructs

- உளச்சீராக்க முறைகள் - Adjustment Mechanisms
- அறிகை ஒத்திசைவின்மை - Cognitive dissonance
- விருத்திப் பணிகள் - Developmental tasks
- மனவிரக்தி Frustration
- கற்றல் Learning
- ஞாபகம் Memory
- ஊக்கல் Motivation
- தன்னியல் கௌரவம் Self Esteem
- சமூக இடைவினை Social interaction

# பூரண விருத்தியின் கூறுகள்

- உடல் வளர்ச்சி
- உடலியக்க விருத்தி
- அறிகை / அறிவாற்றல் விருத்தி
- மனவெழுச்சி விருத்தி
- சமூக விருத்தி
- மொழி விருத்தி

# வயது தொடர்பான விருத்திப் பருவங்கள்

- Infancy - குழந்தை - First 24 months
- Toddler hood – குழந்தைப் பருவம் - 2–3 years
- Early childhood- முன்பிள்ளைப்பருவம் 4- 6 years
- Middle Childhood- பிள்ளைப்பருவம் 6–12 years
- Early Adolescence 12 – 18 years
- Later Adolescence 18 – 24 years

# பாடசாலைகளில் உடற்கல்வி வழங்கப்படுவதற்கான தேவைகள்

- *வளர்ச்சியும் உடல்சார் விகிதமும்*
- *வளர்ச்சியில் ஆண் மற்றும் பெண்பிள்ளைகளுக்கிடையில் நிகழும் வேறுபாடுகள்*
- *கட்டிளைப் பருவத்து உடல்சார் மாற்றங்கள்*
- *ஆளுமையும் ஆரோக்கியமும்*

# உடல் மற்றும் இயக்க வளர்ச்சி

<u>வளர்ச்சியின்பொது உண்டாகும் உடல்சார் மாற்றங்கள்</u>

- பிள்ளை வளரும்போது உடல்சார் மாற்றம் ஏற்படும்.
- வளர்ச்சிக் கோலங்கள் பிள்ளைக்குப் பிள்ளை மாறுபடும், ஆயினும் குறிப்பிட்ட சில பண்புகள் பொதுவானதாக இருக்கும்.
- உடல் மாற்றங்கள் பிள்ளைகளின் ஆர்வம் மற்றும் செயல்களில் செல்வாக்குச் செலுத்தும்.
- மூளை விருத்தியும் நரம்புத் தொகுதி முதிர்ச்சியும் உடல் வளர்ச்சியுடன் இணைந்து செல்லும்.
- எலும்பு வளர்ச்சி, மூட்டுகள் வலுவடைதல், சுரப்பிகளின் தொழிற்பாடு, பால்வகைக்குரிய சுரப்பிகள் வளர்ச்சியுடன் மாற்றமுறும்.

# உடல்சார் வளர்ச்சியும் கல்வியும்

- உடல்வளர்ச்சி சரியாக இடம்பெறாத பிள்ளைகளில் விலகல் போக்குகள்
- உடல் தோற்றமும் ஆசிரியர்களின் மதிப்பீடுகளும்
- உடல் வளர்ச்சிக்கும் உளவளர்ச்சிக்கும் இடையிலான தொடர்புகள்
- உடல் வளர்ச்சியில் மாறுபட்ட நிலைகள்

# உடலியக்க விருத்தி

- பிள்ளையின் முழுமையான விருத்தி பெருமளவுக்கு உடலியக்க விருத்தியில் தங்கியுள்ளது.
- உடல் உறுதி செயல் வேகம், கை கால் தசைநார்கள் மற்றும் ஏனைய தசைநார்களைப் பயன்படுத்துதல்
- மனவெழுச்சிசார் நடத்தைகளும் உளவிருத்தியும் உடலியக்க விருத்தியுடன் தொடர்புடையவை
- பொருட்களைத் தேடுதலும் கையாளுதலும்

# உடலியக்க விருத்தி

- உடலியக்க விருத்தியானது வயது, பால்வகை மற்றும் முதிர்ச்சியுடன் வேறுபடும்.
- விருத்தியில் சமநிலையை ஏற்படுத்துத்தலில் பாடசாலையின் பொறுப்பு.
- புலன்களில் சமநிலையும் உடலியக்க விருத்தியும்
- சுய உதவிக்கான மனப்பாங்கு விருத்தி
- உடலியக்க விருத்தி ஏற்படாதவிடத்து உடல் வளர்ச்சியும் குன்றும்.

# மனவெழுச்சி விருத்தி

- *மனவெழுச்சி என்பது உடல் மற்றும் உளவியல்சார் பிரதிபலிப்புகளாகும். இவை பிள்ளைகளின் வரையறைக்கு உட்படாத வகையில் அல்லது அவர்களுடன் கலந்த வகையில் அவர்களுடைய நாளாந்தச் செயற்பாடுகளோடு கலந்துள்ளன.*

# மனவெழுச்சியைத் தூண்டும் காரணிகள்:

பிள்ளைகளின் தேவைகள், விருப்பு வெறுப்புகள், இலக்குகள் என்பவற்றை இனங்காண்பதன் மூலம் மனவெழுச்சிகளுக்கான காரணங்களைக் கண்டறியலாம்.

- மனவெழுச்சிகள் சில பொருட்கள், பிம்பங்கள் (image)மற்றும் நிகழ்வுகளால் ஏற்படுகின்றன.
- ஒருவருடைய விருப்பங்கள், ஆற்றல்கள் மாறுபடும்போது மனவெழுச்சிகான நிலைமைகளும் மாறுபடலாம்.
- உடல், சுய கணிப்பு, பாதிக்கப்படுதல், சுய எண்ணக்கரு மாற்றமுறுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் மனவெழுச்சி பாதிப்படைதல்.
- மனவெழுச்சியின் பிரதிபலிப்புகள் நிகழ்வுகளின் தன்மையைப் பொறுத்து வேறுபடும்.

- பிள்ளையின் ஆர்வமும் விளக்கமும் அதிகரிக்கும் போது மனவெழுச்சி மாறுகின்றது.

- பிள்ளைகளின் மனவெழுச்சிகளை வளர்ந்தோரின் தராதரங்களுடன் ஒப்பிடக்கூடாது.

- பிள்ளைகளின் மனவெழுச்சி நடத்தைகளை இனங்காண வேண்டிய தேவை ஆசிரியர்களுக்கு உண்டு. அச்சம், கோபம், பதட்டம் முதலியன ஏற்படுதற்கான காரணங்களைக் கண்டறிதல்.

•

- மனவெழுச்சி விருத்தியும் அன்பும் (affection)
  - பிள்ளை – பெற்றோர்
  - பிள்ளை – உறவினர்
  - பிள்ளை – அயலவர்
  - பிள்ளை – பாடசாலை
  - பிள்ளை - ஆசிரியர்
  - பிள்ளை – ஏனைய பிள்ளைகள்

# சமூக விருத்தி

- ஒருவர் தன்னை அறிந்துகொண்டு ஏனையவரோடு இணங்கி வாழப்பழகுதல்.
- பிள்ளைகள் உரிய முதிர்ச்சியைப் பெறும்போது அவருடைய மனப்பாங்குகளும் நடத்தைகளும் சூழலுக்கேற்ப அவரைச் சீராக்கம் செய்கிறது இதனையே சமூக விருத்தி என்கிறோம்.
- சமூக விருத்தியானது ஏனைய நடத்தை விருத்திகளுடன் தொடர்புடையது. (உடல், உள மற்றும் மனவெழுச்சி விருத்தி)

- சமூக விருத்தி பிள்ளையின் உளவிருத்தியைத் தீர்மானிக்கின்றது.

- உள ஆற்றல், மொழியாற்றல், தொடர்பாடல், சமூக உறவுகள் மற்றும் மனவெழுச்சி நிலை என்பவற்றில் சமூகம் செல்வாக்குச் செலுத்தும்.

- சமூக விருத்தியும் சமூகமயமாக்கலும்

# சமூக விருத்தி நிலைகள்

- ஏனையவரை விளங்கிக்கொள்ளல்
- சமூகக் குழுக்களுடன் சேர்ந்து செயற்படுதல்.
- ஆண் - பெண் பிள்ளைகளின் உறவுகளில் மாற்றம்
- சமூக நடத்தையில் கலாசாரம் மற்றும் பொருளாதார நிலைமைகளின் பாதிப்புகள்
- பாடசாலையிலும் வகுப்பறையிலும் ஆசிரியரின் எதிர்பார்ப்புகள்
- சமூக விருத்தியும் தனியாள் வேறுபாடும்.

# சமூக மற்றும் மனவெழுச்சி விருத்தியில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

- சகல எதிர்கால விருத்திகளுக்கும் ஆரம்ப வயதுக் கட்டங்கள் முக்கியமானவை.
- பெற்றோரும் ஏனைய பராமரிப்பாளர்களும் உடன்பாடான விதத்தில் பிள்ளைகளின் மூளை விருத்திக்கு உதவுதல் வேண்டும்.
- முன்பிள்ளைப்பருவ விருத்தியில் குடும்பக் கலாசாரமும் பிள்ளை வளர்ப்புக் கோலங்களும் தாக்கம் செலுத்துகின்றன.
- பொறுப்பும் நிலையானதுமான பராமரிப்பினைப் பெறும் போது பிள்ளைகள் பாதுகாப்பும் பிணைப்பும் பெறுகின்றார்கள்.
- பிள்ளைப்பருவ விருத்தியில் பெற்றோரின் மனவெழுச்சிகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

- நெருக்கமான உறவுமுறைகள் ஆரோக்கியமான சமூக விருத்தியை உருவாக்கும்.
- சக்திவாய்ந்த மனவெழுச்சிகள் பிள்ளைகளின் அனுபவங்களுக்கு வலுவ‘ட்டுகின்றன.
- சமூக மற்றும் மனவெழுச்சிகளின் நலன்கள் உடன்பாடான சூழலால் மேம்படும்.
- சமூக மற்றும் மனவெழுச்சிசார் விருத்திகள் கல்விக்கான (பாடசாலைக்கான) ஆயத்தநிலைக்கு வழிகோலும்.
- பிள்ளைகளைப் பராமரிப்பதில் ஈடுபடும் சகலரும் சமூக மற்றும் மனவெழுச்சி விருத்திக்கு உதவலாம்.

# அறிகை விருத்தியும் உளவிருத்தியும்

- சிந்தனைச் செயன்முறைகளைக் கட்டுருவாக்கம் செய்தல் அறிகை விருத்தியாகும்.
- இச்செயன்முறையில் பிள்ளைப் பருவத்திலிருந்து வளர்ந்தோர் பருவம் வரையில் பிரச்சினை தீர்த்தல், ஞாபகம், தீர்மானம் மேற்கொள்ளல் முதலியவற்றைக் குறிக்கும்.
- கற்றல் நியாயங்காணல், விடயங்களைப் பகுப்பாய்வு செய்தல் ஆகிய செயன்முறைகள் குழந்தைப் பருவத்திலிருத்து பிள்ளைகளின் வளர்ச்சியுடன் இணைந்தவாறு விருத்தியடைகிறது.
- மேலும் இச்செயன்முறையானது, சிந்தித்தல் மற்றும் ஞாபகப்படுத்தல் போன்ற அறிவாற்றல் செயன்முறைகளுடனும் தொடர்புடையது.

# உள ஆற்றல் விருத்தி

பிள்ளை வளருகின்றபோது அதன் உள ஆற்றல்களும் விருத்தியடையும். அவை பின்வரும் முறையில் அமையும்

- குழந்தைப் பருவத்தினர் தமது உடனடித் தேவைகளுடன் இணைந்துள்ள விடயங்களில் ஆர்வம் காட்டுவர்
- பிள்ளைகள் வளரும்போது காலம் பற்றிய உணர்வைப் பெறுவர்.
- குழந்தைப் பருவத்தில் பிள்ளைகள் அழுதல் மூலம் கவனத்தை ஈர்க்கும்.

- வயது அதிகரிக்கும்போது தமது எதிர்காலம் பற்றிய அகக்காட்சியை வெளிப்படுத்தும்.
- பிள்ளைகளின் கவனம் ஆர்வம் என்பன ஒரேவிதத்தில் நிகழ்வதில்லை. முதிர்ச்சி நிலைக்கேற்ப வேறுபடும்
- குறிப்பிட்ட வயதுப் பருவத்திற்குரிய சில நடத்தைக் கோலங்கள் மற்றும் விருத்திப் போக்குகளை அடுத்த அல்லது மேலும் விருத்தியடைந்த நிலைகளில் காணலாம்.
- பிள்ளைப்பருவத்திலும் கட்டிளைப் பருவத்திலும் பல்வேறு விதமாக ஆர்வங்கள் ஏற்படும்.

# ஞாபக விருத்தி

- உள விருத்திசார் வெளிப்பாடுகளில் ஞாபகம் முக்கியமானது.
- ஞாபகம் விருத்தியில்லையெனில் நுண்மதி விருத்தியில்லை.
- ஞாபகம் பிறப்பின்போது குறைவாகவும் வயதும் அனுபவமும் அதிகரிக்கும்போது கூடுதலாகவும் விருத்தியடையும்.
- ஞாபகம் கற்றல் தொழிற்பாட்டுக்கு உதவியாகவும் மறதி அதற்குத் தடையாகவும் அமையும்.
- நினைவில் வைத்தல் எனும் அறிகை அம்சம் மூன்று உளச் செயற்பாடுகளை கொண்டிருக்கும்: மனனஞ் செய்தல், மனதில் நிறுத்தி வைத்தல், நினைவுபடுத்தல்

# ஞாபகத்தை மேம்படுத்துவதற்கான உபாயங்கள்

- இடையறாத பயிற்சி ( practice)
- ஞாபகத்துக்கான உபாயங்கள் (memory strategies)
- விடயங்களை ஒழுங்குபடுத்துதல் (Organization)
- விளக்கம் (understanding)
- கல்வியைப் பொறுத்தவரையில் கற்போனின் இயல்பு, கற்கும் விடயம், கற்கும் சூழல், கற்கும் முறை, கவனவீச்சு, மீட்டல் முதலியன ஞாபகத்தை அதிகரிக்கும்.
- முதிர்ச்சியும் நிலைத்து நிற்றலும்
- அனுபவமும் ஞாபகமும்
- பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளும் ஞாபகமும்.

# ஞாபகத்தை அதிகரிப்பதற்கான திறன்கள்

- உணவு, நீர், தூக்கம் மனவழுத்த முகாமைத்துவம், ஓய்வு , உடன்பாடான சிந்தனை
- உளப்படமாக்கல்
- புதிய திறனைக் கற்றல்
- பொருத்தமான பொழுது போக்கில் ஈடுபடுத்துதல்
- ஒழுங்கான அடிப்படையில் மனக்காட்சியை விருத்தி செய்தல்
- விடயங்களில் ஊக்கத்துடன் ஈடுபடுதல்
- முக்கியமான விடயங்களில் கவனஞ் செலுத்துதல்
- தேவையற்ற விடயங்களைத் தவிர்த்தல்
- ஞாபகத்துக்கான விளையாட்டுகள் முதலியன.

# மொழி விருத்தி

- மொழித் திறன்கள் விருத்தியடைவதற்குச் சூழல் முக்கியமானது.
- சமூக, பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளும் மொழி விருத்தியும்.
- மொழி விருத்தியும் வீட்டுச் சூழலும்
- நுண்மதியும் மொழித் திறன்களும்
- இருமொழிச் சூழலின் பாதிப்புகள்.

# மொழித் தேர்ச்சி ஏற்படும் முறை

- பேச்சுகளில் குறிப்பிடப்படுகின்ற பொருட்களைத் தொடர்புபடுத்துதல்
- பிள்ளைகள் கற்றுக்கொண்ட ஓசைகள், குறியீடுகள் விதிகள் என்பவற்றை கலாசார விதிகளுடன் இணைத்துக் காட்டுதல்.
- நியமஞ்சார் மொழியைப் பயன்படுத்த ஊக்குவித்தல் (வளர்ச்சிப் போக்குகளுடன் இணைத்தல்)

- பிள்ளைகள் கலந்துரையாட இடமளித்தல்
- மொழி விருத்தியில் ஆசிரியர் பங்கு (பொருத்தமான மற்றும் மொழிப் பயன்பாடு)
- மொழி விருத்தியில் விகொட்ஸ்கியின் கொள்கை (Zone of proximal development and more expert members )

## Erikson's Stages of Psychosocial Development

| Approximate Age | Psycho Social Crisis |
|---|---|
| Infant - 18 months | Trust vs. Mistrust |
| 18 months - 3 years | Autonomy vs. Shame & Doubt |
| 3 - 5 years | Initiative vs. Guilt |
| 5 -13 years | Industry vs. Inferiority |
| 13 -21 years | Identity vs. Role Confusion |
| 21- 39 years | Intimacy vs. Isolation |
| 40 - 65 years | Generativity vs. Stagnation |
| 65 and older | Ego Integrity vs. Despair |

(C) The Psychology Notes Headquarter - http://www.PsychologyNotesHQ.com




**Mr. S. Jeyachandran Manager- PDCT -Puliyankulam**